R4920

# LORD’S GOAT AND SCAPE - GOAT
# கர்த்தரின் ஆடும் போக்காடும்

இஸ்ரயேலரின் “பாவ நிவாரண நாள்” இந்த சுவிசேஷ யுகத்தையும் ஆயிரம் வருட யுகத்தில் வரும் ஆசீர்வாதங்களையும் நிழலாக காண்பிக்கிறது என்பதை “விசேஷித்த பலிகளின் ஆசாரிப்புக் கூடார நிழல்கள்” புத்தகத்தில் நாம் முன்னரே காண்பித்திருக்கிறோம். இப்பொழுது, இயேசுவின் ஞானஸ்நானத்திலிருந்து அவரது மகிமையின் இரண்டாம் வருகை வரை பலியின் காலமாக இருக்கிறது. அதன் பிறகு, புது உடன்படிக்கையின் கீழாக, மெய்யான “விசேஷித்த பலிகளின்” புண்ணியம் மனுக்குலத்திற்கு பொதுவான பயன்பாட்டிற்கான காலம் வரும். உண்மையுள்ள பலி கொடுப்பவர் (தலையும் சரீரமும்) தேவனுக்கும் பொதுவாக மனக்குலத்திற்கும் மாபெரும் மெய்யான மத்தியஸ்தராக இருப்பார் என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம்.

இந்த யுகத்தின் அழைப்பு பலிகளுக்கு மட்டும் தன்னைத்தான் வெறுக்கிற நமது இரட்சகரின் அடிச்சுவட்டில் மரணம் வரை பின்பற்றுவதற்காக மட்டுமே. இதுவே கர்த்தரின் திட்டமாக இருந்தது. “தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்.” (மத்தேயு 10:39) பரிசுத்த பவுல் இதை மீண்டும் வலியுறுத்தி விளக்குகிறார். “அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலிகளாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன்.” ஏனெனில் “அவரோடு கூட பாடுகளை சகித்தோமானால் அவரோடு கூட ஆளுகையும் செய்வோம்.” (ரோமர் 12:1; 2 தீமோத்தேயு 2:12)

### அப்போஸ்தலர் நிழலையும் உண்மைப் பொருளையும் மிகவும் அழகாக காண்பிக்கிறார்

பரிசுத்த பவுல் சபையின் பாடுகளையும் இரட்சகரின் பாடுகளையும் நேரடியாக இணைத்து இரண்டையும் பாவ நிவாரண நாளின் “விசேஷித்த பலிகளுடன்” இணைக்கிறார். அவர் நிழலை குறிப்பிட்டு கூறுகிறதாவது: “நாம் அவருடைய நிந்தையை சுமந்து, பாளையத்துக்கு புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டு போகக்கடவோம்.” (எபிரேயர் 13:11-15) இங்கே அப்போஸ்தலர் நமது கர்த்தராகிய இயேசு “காளையின்” மெய்ப் பொருளை நிறைவேற்றினால் நாம் பாவ நிவாரண நாளின் “கர்த்தரின் ஆட்டின்” மெய்ப்பொருளை நிறைவேற்ற வேண்டும் என்று குறிப்பிடுகிறார். காளை கொல்லப்பட்டது போல, நமது கர்த்தர் அந்த அம்சத்தை அவரது ஞானஸ்நானத்தில் மரண பரியந்தமான அர்ப்பணத்தில் நிறைவேற்றினர். “காளையின்” சரீரம் (கொழுப்பு மற்றும் இரத்தத்தை தவிர) பாளையத்திற்கு புறம்பே எடுத்துச் செல்லப்பட்டு எரிக்கப்பட்டது போல உண்மைப் பொருளை நிறைவேற்ற நமது கர்த்தர் அவமானத்தையும் நிந்தையையும் மாம்சத்தின் அழிவையும் அனுபவித்தார்.

அதே போல இந்த யுகத்தின் அழைப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற நாம் (“பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்”) “கர்த்தரின் ஆட்டின்” உண்மைப் பொருளை நாம் நிறைவேற்ற வேண்டும். “காளையின்” அதே அனுபவங்களை “கர்த்தரின் ஆடும்” கடந்து சென்றது போல, நாமும் நமது கர்த்தரைப் போல, முதலாவது பலியின் உடன்படிக்கையை செய்து, அவமானம், நிந்தை மற்றும் தூஷணங்ளை மரணம் பரியந்தம் அனுபவித்து கர்த்தரின் ஆட்டின் மாம்சத்தை எரித்தலை நிறைவேற்ற வேண்டும். இப்படியாக இரட்சகருடன் நீதியினிமித்தம் பாடுபடுகிறவர்கள் அவருடன் ஆயிரம் வருட யுகத்தில் ராஜரீக ஆசாரியர்களாக ஆளுகை செய்வார்கள்.

### போக்காட்டு வகுப்பார் “அவரது நிந்தையை” சுமக்கவில்லை

அர்ப்பணம் செய்து, ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் மரணம் வரை “இயேசுவின் நிந்தையை சுமந்து பாளயத்துக்கு புறம்பே அவரிடத்திற்கு புறப்பட்டு போக” மறுக்கிற அல்லது அசட்டை பண்ணுகிற ஒரு வகுப்பாரை இந்த “போக்காடு” காண்பிக்கிறது. இந்த வகுப்பார் இரட்சகரையோ “அவர்களை பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தையோ” நிராகரிக்கவில்லை. இந்த “போக்காடு” ஆசாரிப்புக் கூடாரத்தின் கதவில் கட்டப்பட்டிருந்தது போல அவர்கள் மெய்ப்பொருளில் அவர்களது அர்ப்பணத்திற்கு வெளியரங்கமான விசுவாசமாக இருந்தது. ஆனால் “ஜீவ காலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்துக்கு உள்ளானார்கள்” என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறது போல கட்டப்பட்டிருக்கிறார்கள்.

எனினும் கர்த்தர் இவர்களை “விடுதலை” பண்ணுவார். ஆனால் கனம், மகிமை மற்றும் சாகாமைக்கு அல்ல. இது “கர்த்தரின் ஆட்டின்” மெய்பொருள் வகுப்பாருக்கு வழங்கப்படும். அவர்களது “விடுதலை” என்பது துன்பங்களை அர்த்தப்படுத்துகிறது. துக்கம், ஏமாற்றம், பிரிவு என்கிற வனாந்திர நிலைமைக்கு அவர்கள் பலவந்தமாக அனுப்பப்பட்டு அவர்களது விசுவாசம் சோதிக்கப்படும். கர்த்தரின் ஆடு வகுப்பார் மரணத்திற்கு போவதால் அவர்கள் அனுபவிக்கிற துன்பங்கள் அளவுக்கு போக்காடு வகுப்பாரும் அனுபவிக்கலாம். இதில் வித்தியாசம் என்னவென்றால் கர்த்தரின் ஆடு வகுப்பார் மனமுவந்து, சந்தோஷத்துடன் தாங்களாகவே பொறுமையுடன் சகிப்பார்கள். ஆனால் மற்ற வகுப்பார் சூழ்நிலையின் சந்தர்ப்பத்தினால் சகிக்க வேண்டும். இவற்றை சகிக்க தவறினால் இரண்டாம் மரணத்தில் சங்கரிக்கப்படுவார்கள். ஆனால் இப்படிப்பட்டவர்கள் எந்த ஆடு வகுப்பார் மூலமும் குறிப்பிடப்படுவதில்லை.

ஆரம்பத்திலிருந்து முடிவு வரை இரண்டு வித்தியாசமான வகுப்பாராக குறிப்பிடப்படுவதாக சிலர் தவறாக நினைக்கிறார்கள். இப்படி அல்ல. அவர்கள் முடிவடைந்த வகுப்பாரையே குறிப்பிடுகிறார்கள். “மனப்பூர்வமாய் பாவம் செய்கிறவர்கள்” (எபிரேயர் 6:4-8; 10:26,27) முற்றிலுமாக புறக்கணிக்கப்படுவார்கள். ஏனெனில் அவர்கள் முற்றிலுமாக தோல்வியடைந்து இரண்டாம் மரணத்திற்கு செல்வார்கள்.

**பந்தயத்தின் முடிவு நமது நிலைமையை முழுமையாக வெளிப்படுத்தும்**

முடிவு வரும் வரை அர்ப்பணம் செய்தவர்களில் யார் பலியை நிறைவேற்றுவார்கள், யார் பந்தயத்திலிருந்து விலகிவிடுவார்கள் என்பது தெரியாது. “உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டீர்கள்.” அந்த நம்பிக்கை நாம் “கர்த்தரின் ஆடு” வகுப்பாராக இருப்போம் என்பதே. சிலர் கொஞ்ச காலம் கர்த்தரின் ஆட்டின் பங்கை நிறைவேற்றுபவர்களாக காணப்பட்டு, பின்னர் “மனதளவில் சோர்ந்து மற்றும் தளர்ந்து” போய் போக்காட்டின் அனுபவங்களை பெற்று அதை மாதிரிப்படுத்துவார்கள். முடிவில் அவர்கள் பெருமையை அனுமதித்து அல்லது வேறு மாதிரியான சுயநலத்தை அனுமதித்து அவர்கள் முத்திரையிடப்பட்ட பரிசுத்த ஆவியை அழித்துப் போடலாம். அதன் மூலம் அவர்கள் தேவனுடைய கிருபையிலிருந்து நீக்கப்பட்டு எதிரிகளாக கருதப்பட்டு இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படலாம்.

மறுபுறம் அநேகர் அபிவிருத்தியில மந்தமாகவும், நீதியினிமித்தமும் சத்தியத்தினிமித்தமும் மந்தமாகவும் இருந்து கர்த்தருடைய ஆவியில் மந்தமாகவும் உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனிமித்தம் அவர்கள் வருடக்கணக்காக “போக்காடு” வகுப்பாராக காணப்படுகிறார்கள். எனினும் பின்னர் வெளிப்படையான உயரிய சுய பலியின் மூலமாக மிகவும் தெளிவான சத்திய வெளிச்சத்தைப் பெற்று, கர்த்தரின் ஆடு வகுப்பாரின் அங்கங்களாக தங்கள் ஓட்டத்தை முடிப்பதாக காண்பிக்கிறார்கள்.

நமது சோதனைகள் அனைத்தும் முடியும் வரை நம்மைக் குறித்து எதையும் தீர்மானிக்க முடியாது. பரிசுத்த பவுல் அதிகமாக தியாகம் செய்த பிறகு, “கர்த்தரின் ஆடு” வகுப்பின் தற்காலிக அங்கமாக அநேக பாடுகளின் அனுபவங்களைப் பெற்ற பிறகு, கர்த்தரின் விசேஷித்த சாதனமாக கனப்படுத்தப்பட்ட பிறகு எழுதுகிறதாவது: “மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கி (புதிய சிந்தை மற்றும் பலியிடுவதற்காக அதன் அர்ப்பணத்திற்கு) கீழ்ப்படுத்துகிறேன்.” (1 கொரிந்தியர் 9:27)

சகோதரரே, விசுவாசிகளுக்கு, மணவாட்டி வகுப்பாருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகிமையின் கிரீடம், கனம் மற்றும் சாகாமையை அடைந்தால் கர்த்தரின் ஆட்டின் அனுவங்களை கர்த்தர் நம்மில் நிறைவேற்றியிருப்பார். உண்மையிலேயே இரண்டாந்தர கன்னிகை வகுப்பார் அங்கு இருப்பார்கள். அவர்கள் தங்களது அற்பமான அனைத்தையும் பலிகொடுக்காமல் வைத்துக் கொள்ளுவார்கள். அதன் பலனால் ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டி அங்கமாவதில் தோல்வியடைவார்கள். இவர்கள் தாழ்ந்த விசுவாசத்தை வெளிப்படுத்தி, மணவாட்டி வகுப்பாரை அவளது கனமுள்ள ஊழியர்களாக பின்பற்றுவார்கள். (சங்கீதம் 45:14) இவர்கள் போக்காடு வகுப்பாராக குறிப்பிடப்படுகிறார்கள்.

எந்த ஒரு வாசகரும் வைராக்கியத்துடனும் மனமுவந்து தனது இரட்சகருடன் பாடுபடாமலும், தனது சக்தி, நற்பெயர் மற்றும் ஜீவனை அவரது ஊழியத்திற்கு கொடுக்காமலும் இருந்தால், தான் போக்காடு வகுப்பில் ஒருவராக கருதப்படவோ அல்லது இன்னும் மோசமாகவோ கருதப்படக்கூடிய ஆபத்து இருப்பதை அவர் உணருகிறார். அப்படிப்பட்டவர்கள் சீக்கிரத்தில் எழும்பி ஆண்டவரின் பலியின் அடிச்சுவட்டில் நடக்க அவரது கிருபை மற்றும் விசுவாசத்திற்காக ஜெபிக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையின் “மகாமேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை” தியானித்த கர்த்தரின் அதே சிந்தையை நாட வேண்டும். உடனே அவன் “பாரமான யாவற்றையும் அவனைச் சுற்றி நெருங்கி நின்ற பாவத்தையும் தள்ளிவிட்டு, அவனுக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் இடுக்கமான வழியில் ஓட வேண்டும்.” அவன் உண்மையில் விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்க வேண்டும். அவன் சிந்தையில் இளைப்புள்ளவனாய் சோர்ந்து போகாதபடிக்கும் ஜெயங்கொள்ளுவதில் தோல்விடையாதபடிக்கும் அவரை நோக்க வேண்டும்.